මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/01/01/21/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025.06.30

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல. : 02/2025**

அமைச்சுக்களின் செயலாளர்கள்/ மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
விசேட செலவின அலகுகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள்/ மாவட்டச் செயலாளர்கள்/
அரச கூட்டுத்தாபனங்கள்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ நியதிச்சட்ட
சபைகள் என்பவற்றின் தலைவர்கள் அனைவருக்கும்

## வரவுசெலவுத்திட்ட அழைப்பு - 2026

## 2026-2030 நடுத்தர கால நிதிக் கட்டமைப்பிற்குள் 2026 வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள்

### அறிமுகம்

**1.** 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றறிக்கையானது, 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவ (PFM) சட்டத்தின் பிரிவு 22 இன் படி இதன் மூலம் வெளியிடப்படுவதுடன், இது அடுத்த நிதியாண்டிற்கான செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பது குறித்த கொள்கை வழிகாட்டுதல் மற்றும் வழிமுறைகளை வழங்குகிறது.

இந்த சுற்றறிக்கை பின்வருவற்றைக் கொண்டிருக்கும்;

- அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படும் நிதி செயல்நுணுக்கக் கூற்று அறிக்கை.
- நடுத்தர கால நிதி கட்டமைப்பிற்கு ஏற்ப சரிசெய்யப்பட்ட 2026 ஆம் ஆண்டிற்கான செலவின உச்சவரம்புகள்.
- பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (கருத்திட்டத் திட்டம் - Project Pipeline) 2026-2028.
- செலவு மதிப்பீடுகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான கொள்கை மற்றும் நிர்வாக வழிகாட்டுதல்.

### 2026 வரவுசெலவுத்திட்ட செயல்நுணுக்கங்கள் மற்றும் முன்னுரிமைப் பகுதிகள்

**2.** அரசாங்கத்தினால் மிகவும் கவனமான முன்னெடுக்கப்படும் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்களினால் முன்வைக்கப்படும் கடினமான தியாகங்களின் விளைவாக இலங்கையின் பொருளாதாரம் நிதி ஸ்திரத்தன்மையில் நிலையான பாதையில் நுழைந்துள்ளது. இருப்பினும், மேலும் சீர்திருத்தங்களைத் தொடர்வதும் நிதி ஒழுக்கத்தைப் பேணுவதும் மிக முக்கியமானதாகவே உள்ளதுடன், இந்த சாதனைகள் மெத்தனத்திற்கான நேரத்தைக் குறிக்கவில்லை. எனவே, தற்போதைய பேரண்டப் பொருளாதார சீர்திருத்தப் பாதையுடன் இணைந்து செயல்படுவது அவசியமாகும்.

**3.** இந்தப் பின்னணியில், பொது நிதி முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 10 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பொது நிதி நிர்வாகத்தின் பரந்த அடிப்படையிலான முக்கிய நோக்கங்களுக்கு உரிய கவனம் செலுத்தி வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

**4.** இதற்கிடையில், இலங்கையின் பொருளாதார செயல்நுணுக்கத்தை உயரந்த வளர்ச்சிப் பாதையை நோக்கி மாற்ற வேண்டிய அவசியம் உள்ளது. இந்த மாற்றம் நிகழாவிட்டால், நிதித் துறையில் மேலும் சீர்திருத்தங்கள் நிலையானதாக இருக்காது.

**5.** மேலும், சமூகக் குழுக்களிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதன் மூலம் சமூகம் முழுவதும் பரவலான வளர்ச்சி உணர்வை உருவாக்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது. ***"உற்பத்திப் பொருளாதாமும் பொருளாதார அபிவிருத்தியில் அனைவரினது ஈடுபாடும்"*** என்பது அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளின் கருப்பொருளாகும்.

**6.** 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டமானது, மேற்கூறிய அனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டும், நிதி செயல்நுணுக்கக் கூற்று மற்றும் 2026 - 2030 மத்திய கால நிதி கட்டமைப்பை உரிய முறையில் கவனத்திற் கொண்டும் தயாரிக்கப்படும். இந்த ஆவணங்களை பொது திறைசேரியின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். (www.treasury.gov.lk)

**2026 வரவுசெலவித்திட்டத்தின் முன்னுரிமை விடயங்கள்**

**7.** ஏனைய முன்னெடுப்புகளில், சமூகத்திற்கு அபிவிருத்தி விளைவுகளை விரைவுபடுத்துவதற்கான முக்கிய உந்துசக்தியாக ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தியினை அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளது. கிராம மட்டத்தில் அபிவிருத்தித் தேவைகள் தொடர்பாக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு மற்றும் சனாதிபதி செயலகத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள "பிரஜாசக்தி" செயலகம் ஆகியவற்றுடன், அவை அனைத்து கிராம சேவை அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டமொன்றினை உருவாக்கியுள்ளன என்ற வகையில் அவற்றுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு அமைச்சுக்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

**2026 ஆம் ஆண்டிற்கான செலவு வரையறைகள்**

**8.** 2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப செலவின வரையறை ரூபா 4,385,400 மில்லியனாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அமைச்சுக்கள் மற்றும் விசேட செலவின அலகுகளுக்கான அடிப்படை உச்ச வரையறைகள் (Base Line Expenditure Ceilings) **பின்னிணைப்பு** I இல் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து செலவின நிறுவனங்களும் ஒதுக்கப்பட்ட உச்சவரையறைக்குள் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்க அறிவுறுத்தப்படுகின்றது.

**விரிவான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள்**

பின்வரும் அரசிறைக் கோட்பாடுகள் மற்றும் வளங்களை ஒதுக்குவதற்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்றி விரிவான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**9. அரசிறைக் கோட்பாடுகள்**

i. வரவு செலவுத்திட்ட தயாரிப்பில் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டுநெறிகளை (fiscal rules and anchors) அமுல்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

ii. புதிய கருத்திட்டங்களைத் தேர்ந்தெடுப்பது, பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து செய்யப்படுவதுடன், பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 40

இன் கீழ் நியமிக்கப்பட்ட பொது முதலீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன், கருத்திட்டத் தெரிவு தொடர்பான இறுதி முடிவு நிதி அமைச்சரால் எடுக்கப்படும். (பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை *www.treasury.gov.lk* இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்)

iii. தனியார் துறை வளர்ச்சிக்கு ஒத்துழைப்பதற்காக, உள்நாட்டு நிலுவைகளைத் தீர்ப்பதற்கும், வரவுசெலவுத்திட்டத்தை செயற்படுத்துவதற்கும் வள ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படும்.

iv. தற்பொழுது செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் கருத்திட்டங்கள் மற்றும் பிற பல்லாண்டு உறுதிமொழிகளை நிறைவுசெய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

v. உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற சொத்துக்களின் செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு போதுமான நிதி கிடைப்பதை உறுதி செய்தல்.

vi. சுகாதார சேவை வழங்கல், பொதுப் போக்குவரத்து, பயன்பாடு மற்றும் பிற பயணிகள் அல்லாத போக்குவரத்து நோக்கங்களுக்காகத் தேவையான வாகனங்களைத் தவிர வேறு வாகனங்கள் கொள்வனவு நிறுத்தத்தினை தொடர்ந்து முன்னெடுத்தல்.

vii. அரசாங்கத்தினால், குறிப்பிடத்தக்க செலவினங்கள் மூலம் பெறப்பட்ட பயன்படுத்தப் படாத பொது சொத்துக்களை உற்பத்தி ரீதியாகப் பயன்படுத்துவதற்கான அல்லது முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.

viii. சட்டப்பூர்வ நிதியங்களைப் பயன்படுத்துதல், அத்தகைய நிதியங்கள் வங்கிகள் அல்லது பிற மூலதனச் சந்தை கருவிகளில் முதலீடு செய்யப்படுவதற்குப் பதிலாக தொடர்புடைய சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப நோக்கங்களுக்கு இணங்க பொருளாதார நன்மைகளை வழங்குவதை உறுதி செய்தல்.

**10. வள ஒதுக்கீடு**

i. சம்பளங்கள், கையிலுள்ள தீர்க்கப்படாத சிட்டைகள், வாடகை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் வரிகள், மின்சாரம், நீர், தொலைபேசி கட்டணங்கள் போன்ற அரசாங்கத்தின் சட்டப்பூர்வ கடப்பாடுகள் மற்றும் நிலையான செலவுகளுக்கு வளங்களை முழுமையாக ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்தல்.

ii. வகைமாற்ற நடைமுறை (Virement Procedure) மற்றும் மேலதிக ஒதுக்கீடுகள் மூலம் ஒதுக்கீட்டு மாற்றத்தைத் தவிர்க்க அத்தியவசிய செலவின (non-discretionary expenditure) விடயங்களுக்கு போதுமான அளவு ஒதுக்கீடுசெய்தல் வேண்டும்.

iii. நிறைவடையும் தருவாயிலுள்ள, தற்போது செயற்படுத்தப்பட்டுவரும் கருத்திட்டங்கள் சமூகத்திற்கு விரைவான பயன்களை வழங்குவதால் அவற்றுக்கு முன்னுரிமை அளித்தல்.

iv. கிராமிய மட்டத்திலான அபிவிருத்தி மற்றும் உற்பத்தி சார்ந்த பொருளாதாரத்தை முன்னேற்றுவதை ஆதரிக்கும் நடவடிக்கைகளுக்கான ஒதுக்கீட்டிற்கு முன்னுரிமை அளித்தல்.

v. வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளிலுள்ள குறைபாடுகள் மற்றும் சுங்கத்திலிருந்து பொருட்களை அகற்றுவதில் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு வரி தொடர்பான அனைத்து செலவினங்களும் அந்தந்த நிறுவனங்களின் வரவுசெலவுத்திட்டங்களில் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதி செய்தல்.

vi. எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள விளைவுகளை உறுதி செய்வதற்காக தற்போதுள்ள கணினி முறைமைகள் / மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய சாதனங்களை இற்றைப்படுத்தவும் மேம்படுத்துவதற்கும் முன்னுரிமை அளித்தல்.

vii. ஏற்கனவே உள்ள பொது சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் வினைத்திறனை அதிகரிக்கும் வகையில் அதன் பராமரிப்பு, தரத்தை வழக்கமாகப் பாதுகாத்தல் மற்றும் சரியான நேரத்தில் புதுப்பித்தல் ஆகியவற்றை பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் பொறுப்பான அதிகாரிகள் உறுதி செய்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக வீதிகள், புகையிரதப் பாதைகள், மருத்துவமனைகள், பாடசாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், அணைக்கட்டுகள், நீர் வழங்கல் திட்டங்கள், கைத்தொழிற் பேட்டைகள் மற்றும் பொது கட்டிடங்கள் போன்ற பொது உடைமைகள் உட்பட அரசாங்க சொத்துக்களின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புக்கு நிதியளிப்பதற்கு பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் போதுமான முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

viii. பல ஆண்டுகள் வழங்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு உரிய கவனம் செலுத்துதல்.

**11. புதிய கருத்திட்டத் தெரிவு முறையியல்**

வழங்கப்பட்டுள்ள நிதி செலவின வரையறைக்குள் புதிய கருத்திட்டங்களுக்கான செலவின ஏற்பாடுகள் சேர்க்கப்படவில்லை. எனவே, முன்மொழியப்பட்ட புதிய கருத்திட்டங்களின் பட்டியலைக் கொண்ட தனியானதொரு பின்னிணைப்பினைச் சமர்ப்பித்தல் வேண்டும். பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மட்டுமே வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்படுவதற்கு தகுதியுடையவையாகும். *www.treasury.gov.lk* என்ற திறைசேரி இணையத்தளம் மூலம் பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை அணுகலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்திட்டங்கள் தேவையான அனைத்து தயார்நிலை நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளன என்பதை உறுதி செய்வதற்கு பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் பொறுப்பாகும். பொது முதலீட்டுக் குழு (PIC) செலவின நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை மீளாய்வு செய்து நிதி அமைச்சருக்கு முன்னுரிமை பட்டியலை பரிந்துரைக்கும். பொது முதலீட்டுக் குழு பரிந்துரைத்த கருத்திட்டங்களிலிருந்து வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கான கருத்திட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை நிதி அமைச்சர் வைத்திருக்கிறார்.

**2026 – 2028 மத்திய கால வரவுசெலவுத்திட்ட கட்டமைப்பிற்குள் 2026 ஆம் ஆண்டிற்கான செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல்**

**12. மீண்டெழும் செலவினம்**

மீண்டெழும் செலவினங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்போது பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்தல் வேண்டும்.

**12. i. சம்பளங்கள்**

(அ) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2025 இனால் அறிவிக்கப்பட்ட சம்பள திருத்தத்தின் விளைவாக 2026 ஆம் ஆண்டு சம்பள உயர்வுக்கான ஏற்பாடுகள் தனித்தனியாகக் காட்டப்படல் வேண்டும்.

(ஆ) 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆட்சேர்ப்பு நிச்சயமாக நடைபெறும் என்பது உறுதி செய்யப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர, புதிய ஆட்சேர்ப்புகளுக்கான ஏற்பாடுகள் சேர்க்கப்படக்கூடாது. அதற்கான தெரிவுகள் மற்றும் / அல்லது நேர்காணல்கள் ஏற்கனவே நடத்தப்பட்டன. அத்தியாவசிய ஆட்சேர்ப்புகளுக்கான

செலவினங்களை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து வெளிப்படையான அனுமதியுடன், 2026 ஆம் ஆண்டில் மேலதிக ஒதுக்கீடுகள் மற்றும் வகைமாற்ற நடைமுறையின் கீழ் ஒதுக்கீடுகளை மாற்றுவதன் மூலம் நிர்வகிக்கலாம்.

(இ) 2025.06.30 அன்றுள்ளவாறு உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், 2026 ஆம் ஆண்டிற்கான சம்பளம், ஊதியம் மற்றும் பிற கொடுப்பனவுகள், ஒவ்வொரு அதிகாரிக்கும் தனித்தனியாக கணக்கிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் நிறுவன மட்டத்தில் தயாரிக்கப்பட்டு **பின்னிணைப்பு II** இல் வழங்கப்பட்ட வடிவமைப்பின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். நோக்கக் குறியீடு 1503 இன் கீழ் தனிப்பட்ட ஊதியங்கள் வரவுசெலவுத்திட்ட தயாரிப்பு அதிகாரிகளின் விவரங்கள், 2025 ஆம் ஆண்டு சம்பள திருத்தம் தொடர்பான அந்தந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் அதே வடிவமைப்பைப் பயன்படுத்தி, ஒவ்வொரு நிறுவனத்தாலும் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**12. ii. ஏனைய மீண்டெழும் செலவினம்**

(அ) இருப்பு மட்டங்கள், காலாவதி திகதிகள் மற்றும் பயன்பாட்டு வடிவங்கள் கண்காணிக்கப்படும் வலுவான பொருட்கள் பதிவேட்டு முகாமைத்துவ முறைமையினைச் (Inventory Management System) செயற்படுத்துவதற்கு ஒத்துழைக்கும் வகையில் மருந்துப் பொருட்கள் உட்பட வழங்கல்களுக்கான வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். இதற்குமேலதிகமாக, உகந்த பொருட் பதிவேட்டினைப் பராமரிக்கவும், அதிகப்படியான இருப்பு மற்றும் வீண்விரயத்தைத் தடுக்கவும் வழக்கமான பொருட்கள் பதிவேட்டு கணக்காய்வு முன்னெடுக்கப்படல் வேண்டும்.

(ஆ) எரிபொருளுக்கான வரவுசெலவுத்திட்டத் தயாரிப்பானது 2025.07.01 அன்றுள்ள எரிபொருள் விலையின் அடிப்படையில் இடம்பெறல் வேண்டும்.

(இ) பிற வழங்கல்கள் (1205) மற்றும் பிற சேவைகள் (1409) என்பவற்றின் கீழான ஒதுக்கீடு ரூபா 100 மில்லியனை விஞ்சுகின்ற போது, ரூபா 50 மில்லியனை விஞ்சிய தனிப்பட்ட செலவுக் கூறுகளை மட்டுமே வகைப்படுத்த வேண்டும். ரூபா 50 மில்லியனை விஞ்சாத தனிப்பட்ட செலவுக் கூறுகளை, கைப்படுத்தல் அவசியமில்லை.

**13. மூலதனச் செலவினம்**

நடந்து கொண்டிருக்கும் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான ஒதுக்கீடு பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டதின் (PIP) அடிப்படையில் இருப்பதுடன் அமைச்சிற்கு கொடுக்கப்பட்ட வரையறைக்குள் இருத்தல் வேண்டும்.

**13. i. அபிவிருத்திச் செலவினம்**

(அ) மூலதனச் செலவினப் பயன்பாடு குறைவாக இருப்பதை அரசாங்கம் ஒரு முக்கியப் பிரச்சினையாகக் கண்டறிந்துள்ளது. ஏனெனில் இது பொருளாதார வளர்ச்சியைத் தடுப்பதுடன், மதிப்பூடு செய்யப்பட்ட செலவிற்குள் பொதுமக்களுக்கு எதிர்பார்க்கப்படும் பலன்களை சரியான நேரத்தில் வழங்குவதை தாமதப்படுத்துகிறது. கடந்த வருட வரவுசெலவுத்திட்ட அழைப்பில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது போல, குறைந்த மொத்த செலவு மற்றும் குறைவான சிக்கல்கள் இருந்தாலும் கணிசமான எண்ணிக்கையிலான கருத்திட்டங்கள் பலவீனமான முன்னேற்றத்தையும் செயற்படுத்தல் தாமதங்களையும் காட்டுகின்றன. எனவே, மூலதனக் கருத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை ஒதுக்குவதற்கு முன்பு கருத்திட்டத் தயார்நிலை மற்றும் நிறுவனத் திறனில் வலுவான கவனம் செலுத்தி, கருத்திட்ட செயற்படுத்தலை

விரைவுபடுத்துவதற்கு தலைமைக் கணக்கீடு அதிகாரிகளின் உடனடி கவனம் தேவையாகும். மேலும், தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து, அத்தகைய இயல்புடைய கருத்திட்டங்களை மீள்பரிசீலனை செய்வது (re-scoping), பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து முன்னுரிமைகளைக் குறைத்தல் (moving down in the pipe-line) அல்லது அதிலிருந்து நீக்குவது குறித்து பரிந்துரைக்கப்படுகிறது.

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களுக்கு ஒரு தனி இணைப்பு வழங்கப்பட வேண்டும். பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்க்கப்படாவிட்டாத எந்த புதிய கருத்திட்டங்களும் தேர்ந்தெடுக்கப்படமாட்டாது. கருத்திட்டத் தயார்நிலை தெளிவான சான்றுகளால் நியாயப்படுத்தப்படல் வேண்டும். அமைச்சுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய முதலீட்டுக் கருத்திட்டங்களின் முன்னுரிமை பொது முதலீட்டுக் குழுவால் ஆராயப்படுவதுடன் அத்தகைய புதிய திட்டங்களின் இறுதித் தேர்வு பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளின்படி நிதி அமைச்சரால் தீர்மானிக்கப்படும்.

(இ) அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்போது, ஒவ்வொரு மூலதன துணைக் கருத்திட்டத்தின் கீழும் கணக்கு அட்டவணைக்குள் (Chart of Account) நிலையான பொருள் குறியீடுகளின்படி ஒதுக்கீடுகள் பிரிக்கப்படல் வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு துணைக் கருத்திட்டத்தில் கட்டிடமொன்றினை நிர்மாணித்தல், இயந்திரங்களை வாங்குதல், மென்பொருள் அபிவிருத்தி போன்றவை இருந்தால், வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் அதற்கேற்ப அந்தந்த நிலையான பொருள் குறியீடுகளின் கீழ் ஒதுக்கப்படல் வேண்டும்.

(ஈ) குறிப்பிட்டுச் சொல்லப்பட்டாலன்றி, தொடர்புடைய ஆண்டைத் தாண்டி, முந்தைய ஆண்டின் வரவுசெலவுத் திட்டங்களைத் தொடர எந்த ஏற்பாடும் சேர்க்கப்படக்கூடாது.

(உ) தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டு பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்க்கப்பட்ட அந்தந்த கருத்திட்டங்கள் தவிர, நடப்பு வருடாந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தொகுதி ஒதுக்கீடுகள் (Block allocations) பரிசீலிக்கப்படமாட்டாது.

(ஊ) "பொது சேவையின் செயற்திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துதல்" என்ற 2024.08.05 ஆந் திகதிய அமைச்சரவை முடிவைக் கருத்திற் கொண்டு, தற்போதுள்ள தகவல் அமைப்புகளை மேம்படுத்துவதற்கும், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை தனித்துவமாக அடையாளம் காணும் வகையில் எதிர்கால அமைப்புகளைத் திட்டமிடுவதற்கும் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். இதன் மூலம் தரவு பகிர்வு மற்றும் முறைமை ஒருங்கிணைப்பின் ஊடாக மேம்பட்ட சேவை வழங்கலை எளிதாக்க வேண்டும்.

(எ) சில சட்டப்பூர்வ நிதியங்கள், அவை நிறுவப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல், செயலற்ற வைப்புத் தொகைகளாகப் பராமரிக்கப்படுவது கவனிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நடைமுறைகள் நிறுத்தப்பட வேண்டும். இந்தச் சூழலில், தேசிய பொருளாதார முன்னுரிமைகளுக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிக்கும் அதே வேளையில், அந்தந்த நிதியங்களின் நோக்கங்கள் மற்றும் சட்டப்பூர்வ ஆணைகளுடன் ஒத்துப்போகும் அபிவிருத்தி சார்ந்த கருத்திட்டங்களுக்கு முன்மொழிவு/கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

**13. ii. நிறுவன மூலதன செலவினம்**

(அ) 03/2021 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையினால் விதிக்கப்பட்ட வாகனக் கொள்வனவு முடக்கம் தொடர்ந்து அமுலில் இருக்கும். இருப்பினும், சுகாதார சேவை வழங்கல், பொது போக்குவரத்து, பயன்பாடு மற்றும் பிற பயணிகள் அல்லாத போக்குவரத்து நோக்கங்களுக்கான வாகனங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக பரிசீலிக்கப்படும்.

(ஆ) திரட்டு நிதியத்திலிருந்து செலுத்த வேண்டிய வெளிநாட்டுப் பயிற்சிக்கான எந்த ஏற்பாடும் திறன் அபிவிருத்திக்கு (நோக்கக் குறியீடு 2401) கீழ் சேர்க்கப்படாது. அத்தகைய பயிற்சித் தேவைகள் மெய்நிகர் முறைகள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் மூலம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) சேவை பிரமாணக் குறிப்புகள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள் (Schemes of Recruitments SOR), சுற்றறிக்கைகளின் விதிகள் அல்லது அத்தகைய பயிற்சிகள் அலுவலரின் கடமைகளுக்கு நேரடியாக தொடர்புடையதாக இருக்கும்போது, சிறப்புப் பணிகளை நிர்வகிக்க அத்தகைய பயிற்சிகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் உள்ளூர் பயிற்சிக்கான ஏற்பாடுகள் சேர்க்கப்படல் வேண்டும்.

**13. iii. பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடுகள்**

(அ) தற்போதுள்ள சொத்துக்களின் பயன்பாட்டை அதிகப்படுத்தும் அதே வேளையில், அவற்றின் பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கு போதுமான ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அதன்படி, மூலதன மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது, ஏற்கனவே உள்ள சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றின் அதிகபட்ச உற்பத்தி பயன்பாட்டை அடைவதற்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள், மருத்துவமனைகள், பாடசாலைகள், பிரதான அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்களைப் பராமரிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை முன்னுரிமை அடிப்படையில், முறையான பராமரிப்புத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்டு பாதுகாப்பது அவசியமாகும்.

**13. iv. அரச நிதிப் பரவலாக்கம்**

(அ) மாகாண சபைகளுக்கு நேரடியாக ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் நிரல் அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களின் கீழ் நிதி ஏற்பாடுகள் சேர்க்கப்படக்கூடாது. நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பிராந்திய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது கருத்திட்டங்கள் மாகாண சபைகளின் நிகழ்ச்சித்திட்டங்களுடன் நகலெடுப்பதைத் (duplication) தவிர்ப்பதற்கு, அந்தந்த மாகாண சபைகளுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

**முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்**

**14.** அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான மதிப்பீடுகள் **பின்னிணைப்பு III** இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வணிக முற்பனக் கணக்குகளை பராமரிக்கும் நிறுவனங்கள், அது தொடர்பான மதிப்பீடுகளை, போதுமான தகவல்களைக் கொண்ட பொருத்தமான படிவத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

## அனைத்து செலவின நிறுவனங்களுக்கும் பொதுவான விடயங்கள்

### 15. காலநிலை மாற்றத்திற்கு எதிர்வினையாற்றும் தன்மை

காலநிலை மாற்ற தாக்கங்கள் நிதி ரீதியாக முக்கியமானவை என்பதால், வரவுசெலவுத்திட்டத்தில் காலநிலை தொடர்பான செலவினங்களுக்கு குறியிடுதலை (climate tagging) அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, செலவின நிறுவனங்கள் தங்கள் வரையறைக்குள் காலநிலை இடர் குறைப்பு, பேரிடர் மீட்பு, தணிப்பு, தழுவல் மற்றும் சாத்தியமான காலநிலை தொடர்பான பேரிடர்களை நிர்வகித்தல் தொடர்பான செலவினக் கூறுகளை அடையாளம் காணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

மேலும், 2026 வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரிக்கும் போது, அத்தகைய இடர்களை முறையாகக் கண்டறிந்து, இடர் முகாமைத்துவத்துக்கு பொருத்தமான செலவினங்களை ஒதுக்குவதற்கு போதுமான கவனம் செலுத்தப்படல் வேண்டும். காலநிலை பரிசீலனைகளை ஒருங்கிணைத்து, காலநிலை தாக்கங்களுக்கு பாதிப்பைக் குறைக்கும் நிலையான பொது முதலீடுகளை உறுதி செய்வதற்கு, பொது முதலீட்டுத் திட்டமிடலில் காலநிலை இடர் மதிப்பீடுகள் மற்றும் காலநிலை-புத்திசாலித்தனமான முதலீடுகள் ஆகியவை அடங்கும்.

எனவே **பின்னிணைப்பு IV** இனை பூர்த்தி செய்து வரவுசெலவுத்திட்டத்துன் சமர்ப்பிக்க வேண்டும். காலநிலை தொடர்பான செலவுகள் எதுவும் இல்லாத நிலையில், பூச்சிய அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

### 16. நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பாலின அக்கறை

நிலையான அபிவிருத்திப் பேரவை வலைத்தளத்திலிருந்து (https://sdc.gov.lk) பதிவிறக்கம் செய்யக் கிடைக்கும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, அனைத்து வரவுசெலவுத்திட்ட செலவின நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மற்றும் தொடர்புடைய இலக்குகளுடன் சீரமைக்கப்படல் வேண்டும். இந்த சீரமைப்பு உங்கள் நிறுவனங்களில் இதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம், நிலையான அபிவிருத்திப் பேரவையின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். தொகுக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட தகவலின் மென் பிரதியினை, செலவு மதிப்பீடுகளுடன் சமர்ப்பிப்பதோடு, தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திற்கு பிரதியுடன், info@sdc.gov.lk வழியாக நிலையான அபிவிருத்திப் பேரவைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

### 17. பாலினம், இயலாமை மற்றும் சமூக சமத்துவப் பொறுப்பு

அனைத்து செலவின நிறுவனங்களும் பாலினம், இயலாமை மற்றும் சமூக சமத்துவத்திற்கு தங்கள் பொறுப்பை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகின்றன - அதாவது, அனைத்து ஆண்கள் மற்றும் பெண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனைத்து வருமான மற்றும் சமூகக் குழுக்களும் பொதுப் பொருட்கள் மற்றும் சேவைகளின் அணுகுதல், பங்கேற்பது மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கும் நன்மைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இனப்பெருக்க சுகாதார சேவைகள், பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கான திட்டங்கள், பெண்களுக்கான இலக்கு ஊக்கத்தொகைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களின் அணுகல் மற்றும் அதிகாரமளிப்பை ஊக்குவிக்கும் முன்முயற்சிகளுக்கு நிதி ஒதுக்குவதில் சிறப்பு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

## 18. செலவு மதிப்பீடுகளை சமர்ப்பித்தல்

இந்த சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு முழுமையாக இணங்க வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை வகுப்பதில் அனைத்து செலவின நிறுவனங்களின் முதன்மையான கவனம் செலுத்தப்படல் வேண்டும். 2025 ஜூலை 31 அன்று அல்லது அதற்கு முன்னர் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து இணைப்புகளையும் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ முறைமை (ITMIS) மூலம் மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல், செலவு மதிப்பீடுகளுக்கான பதிப்பு 2026EXP_ES மற்றும் முற்பணக் கணக்கு மதிப்பீடுகளுக்கான பதிப்பு 2026ADV_ES ஆகியவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். 2026–2028 ஆம் ஆண்டுக்கான நடுத்தர கால வரவுசெலவுத்திட்ட கட்டமைப்பிற்குள், 2027 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளுக்கான கணிப்புகளுடன், 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை உள்ளிடுவது கட்டாயமாகும். இதற்கு மேலதிகமாக, செலவு மதிப்பீடுகளின் கடின மற்றும் மென்மையான பிரதிகள் மற்றும் அனைத்து தொடர்புடைய இணைப்புகளும் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களின் அந்தந்த பணியாளர் அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ITMIS இல் தரவை உள்ளிடும்போது ஏதேனும் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து ITMIS உதவி மையத்தை 011-2484999 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## 19. வருமான மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்

2026 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடுகளைச் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்களைக் கொண்ட தனியானதொரு சுற்றறிக்கை, அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் உரிய நேரத்தில், தேவைப்படும்போது வெளியிடப்படும்.

## 20. வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்கள்

செலவின நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளின்படி, பொது திறைசேரி அந்தந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு கவலைகளை அடையாளம் காணவும், முன்னுரிமைகளை நிறுவவும், மதிப்பீடுகளில் தேவையான திருத்தங்களைச் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வரவுசெலவுத்திட்ட விவாதங்கள் 2025 ஆகஸ்ட் 05 முதல் 2025 செப்டம்பர் 04 வரை நடைபெற உள்ளன.

## 21. தெளிவுபடுத்தல்கள்

இதுதொடர்பாக மேலும் ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்படின், உங்கள் அமைச்சு, திணைக்களம் அல்லது நிறுவனத்தின் விடயத்திற்குப் பொறுப்பான தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் தொடர்புடைய பதவிநிலை அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/-**
**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:
i. சனாதிபதியின் செயலாளர்
ii. பிரதமரின் செயலாளர்
iii. அமைச்சரவை செயலாளர்
vi. கணக்காய்வாளர் நாயகம்
v. செயலாளர், நிதி ஆணைக்குழு

*பின்னிணைப்பு I*

## ஆகக்கூடிய லெவின வரைறைகள் 2026

(ரூ.மில்லியன்)

| அமைச்சு / விசேடசெலவினக் கூறுகள் | மொத்த செலவின வரையறை |
|---|---|
| விசேடசெலவினக் கூறுகள் | 33,500 |
| அதிமேதகு சனாதிபதி | 11,385 |
| பிரதம அமைச்சர் அலுவலகம் | 1,298 |
| உயர் நீதிமன்ற நீதிபதிகள் | 645 |
| அமைச்சரவை அலுவலகம் | 280 |
| அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் | 440 |
| நீதிச் சேவை ஆணைக்குழு | 185 |
| தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 307 |
| நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை | 66 |
| இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | 1,665 |
| நிதி ஆணைக்குழு அலுவலகம் | 160 |
| இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 495 |
| பாராளுமன்றம் | 5,280 |
| பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம் | 90 |
| பாராளுமன்ற அரசாங்க கட்சியின் முதற்கோலாசானின் அலுவலகம் | 95 |
| பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் | 360 |
| தேர்தல்கள் ஆணைக்குழு | 6,650 |
| தேசிய கணக்காய்வு அலுவலகம் | 3,785 |
| நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | 54 |
| கணக்காய்வு சேவை ஆணைக்குழு | 95 |
| தேசிய பெறுகை ஆணைக்குழு | 140 |
| எல்லை நிர்ணய ஆணைக்குழு | 25 |
| புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு (கடன் மீள் கொடுப்பனவு நீங்களாக) | 14,500 |
| நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு (கடன் | 535,000 |
| பாதுகாப்பு அமைச்சு | 440,100 |
| நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு | 58,500 |
| சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 550,000 |
| வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு | 23,000 |
| வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு | 2,500 |
| போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 455,000 |
| கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு | 224,000 |
| வலுசக்தி அமைச்சு | 22,300 |
| நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு | 104,000 |
| கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | 36,000 |
| கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு | 300,000 |
| பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | 653,500 |
| மாகாண சபைகள் | 607,000 |
| பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு | 18,000 |
| கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | 15,000 |
| கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு | 9,500 |
| சுற்றாடல் அமைச்சு | 16,700 |
| மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | 17,100 |
| டிஜிட்டல் பொருளாதார அமைச்சு | 17,000 |
| பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 207,000 |
| தொழில் அமைச்சு | 7,700 |
| இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | 12,500 |
| விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சு | 6,000 |
| **ஆரம்ப செலவினம்** | **4,385,400** |
| **கடன் மீள் கொடுப்பனவு** | **4,350,000** |
| வட்டிக் கொடுப்பனவு | 2,850,000 |
| அரசாங்க கடன் மீள் கொடுப்பனவு | 1,500,000 |
| **மொத்த செலவினம்** | **8,735,400** |

*பின்னிணைப்பு II*

## 2026 இற்கான சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் பிற கொடுப்பனவுகள் (ஒவ்வொரு வ.செ.திட்ட கருத்திட்டத்திற்கும் தனியான படிவங்களை சமர்ப்பித்தல்)

| | | | | | 1001 | | | 1003 | | | | 1202 | 1401 | 1402 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல. | பதவி | பெயர் | சம்பள குறியீடு | நிரந்தர / அமைய | 2025* யூன் மாதத்திற்கான அடிப்படை சம்பளம் | 2026 ஆம் ஆண்டிற்கான மாத சம்பள உயர்வு (பொ.நி. சுற்றறிக்கை 10/2025 இன் படி) | 2026 ஆம் ஆண்டு சம்பள உயர்வுக்கான தேவை (உயர்வு திகதியின் அடிப்படையில்) | மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு (ரூபா 17,800/-) | மாதாந்த நிறைவேற்றுத்தர கொடுப்பனவு | மாதாந்த மொழிக் கொடுப்பனவு | மற்ற கொடுப்பனவுகள் (ஒவ்வொரு கொடுப்பனவையும் தனித்தனியாக குறிப்பிடவும்)** | மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு | மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு | மாதாந்த தொலைபேசி கொடுப்பனவு |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | |

*ஜூன் மாதத்திற்கான அடிப்படை சம்பளம், சம்பளப் பட்டியலில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் கண்டிப்பாக உறுதி செய்ய வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள், நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக, மாதாந்த சுருக்கங்களுடன் சரிபார்க்கப்படும்.

*** தேவைக்கேற்ப நெடுவரிசைகளை உள்ளீடுசெய்யவும்

### பதவியணி விபரங்கள்

| | அங்கீகரிக்கப்பட்ட / உண்மையான பதவியணி (2025.06.30 அன்றுள்ளவாறு) | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சிரேட்ட மட்டம் | | | | மூன்றாம் நிலை | | இரண்டாம் நிலை | | ஆரம்ப நிலை | | ஏனைய | | மொத்தம் | |
| | வகுப்பு I மற்றும் விஷேட தரம் | | வகுப்பு II மற்றும் III | | | | | | | | | | | |
| அமைச்சு / திணைக்களம்/ நிறுவனம் | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

## 2026 வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டுக்கான முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்
## அரசாங்க அலுவலர்கள் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

**அமைச்சு / திணைக்களம்/ மாவட்டச் செயலகத்தின் பெயர்:**

**முற்பண "பீ" கணக்கின் விடய இல.:**

| | | | | |
|---|---|---|---|---|
| 30.06.2025 அன்று நிரந்தர ஊழியர் எண்ணிக்கை | **A** | xxx | | |
| 30.06.2025 அன்று ஒப்பந்த மற்றும் அமைய ஊழியர் எண்ணிக்கை | **B** | xxx | | |
| ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை | **C** | xxx | | |
| | | | | |
| **பண்டிகை மற்றும் விஷேட முற்பணம்** | | | | |
| ஊழியர் ஒருவருக்கு பண்டிகை மற்றும் விஷேட முற்பணம் (10,000+4,000) | | | 14,000 | |
| பண்டிகை மற்றும் விஷேட முற்பணத்துக்கு தேவையான மொத்த ஒதுக்கீடு **(C x 14,000)** | **D** | | **xxxxx** | |
| | | | | |
| **இடர் கடன்கள்** | | | | |
| சிரேட்ட / 3ம் நிலை/ 2ம் நிலை ஊழியர்களின் எண்ணிக்கை | **A** | | xxxx | |
| சிரேட்ட /3ம் நிலை/ 2ம் நிலை ஊழியருக்கான இடர் கடன் | | | 400,000 | |
| | | | | |
| சிரேட்ட /3ம் நிலை/ 2ம் நிலை ஊழியருக்கான இடர் கடனுக்கான மொத்த ஒதுக்கீடு **( A x 400,000)** | **E** | | **xxxxx** | |
| | | | | |
| தேவையான மொத்த ஒதுக்கீடு **( D+E)** | | | | xxxxxxx |
| 30.06.2025 இறுதியில் முற்பண "பி" கணக்கு தற்போதய மீதி | | | | (xxxxxx) |
| 30.06.2025 அன்று முற்பண "பி" கணக்கில் எஞ்சிய ஏற்பாடுகள் | | | | (xxxxxx) |
| கடன்கள் மற்றும் முற்பணங்களைச் செலுத்துவதற்கு தேவையான மீதி தொகை | **F** | | | xxxxxxx |
| | | | | |
| | | | | **உத்தேச வரையறை** |
| **2026 இற்கு தேவையான ஆகக்கூடிய செலவின வரையறை** | **F** | | **xxxxxxx** | **xxxx** |
| | | | | |
| 01.01.2025 – 30.06.2025 காலப்பகுதிக்கான மொத்தப் பெறுகை | | | xxxx | |
| மாதத்துக்கான சராசரிப் பெறுகை | | | xx | |
| 2025 வருடத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட பெறுகை | | | xxxx | |
| | | | | |
| **2026 இற்கு தேவையான ஆகக் குறைந்த பெறுகை வரையறை** | **G** | | | **xxxx** |
| | | | | |
| 01.01.2025 அன்றுள்ளவாறு முற்பண "பி" கணக்கு | | | xxxxx | |
| 2025 வருடத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த செலவினம் | | | xxxx | |
| 2025 வருடத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த பெறுகைகள் | | | (xxxxxx) | |
| 31.12.2025 அன்றுள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட மீதி | | | xxxxxxx | |
| | | | | |
| 2026 இற்குத் தேவையான மொத்த செலவினம் | **F** | | xxxxxxx | |
| 2026 இற்குத் தேவையான மொத்த பெறுகைகள் | **G** | | (xxxxxx) | |
| **2026 பற்று மீதிக்கு தேவையான ஆகக்கூடிய வரையறை** | | | | **xxxxxx** |

திகதி: ..........................  ..........................

ஒப்பம்
திணைக்களத் தலைவர்

*பின்னிணைப்பு IV*

## காலநிலை மாற்றத்திற்கு எதிர்வினையாற்றும் தன்மை

**அமைச்சு / திணைக்களம் /நிறுவனம் :**
**செலவினத் தலைப்பு இல.:**

| தொடர் இல. | கருத்திட்டத்தின் பெயர் | ஒதுக்கீட்டின் செலவின விவரங்கள் | மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) | 2026 மதிப்பீடு (ரூபா) | காலநிலை மாற்றத்திற்கு எதிர்வினையாற்றும் தன்மை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தணிப்பு | | தழுவல் | | இழப்பு மற்றும் சேதம் | |
| | | | | | குறியிடுதல் (Tagging)* | 2026 மதிப்பீடு | குறியிடுதல் (Tagging)* | 2026 மதிப்பீடு | குறியிடுதல் (Tagging)* | 2026 மதிப்பீடு |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

*"கொள்கை": திட்டத்தின் முதன்மை நோக்கம் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய தழுவல், தணிப்பு மற்றும் இழப்பு மற்றும் சேதத்தை நிவர்த்தி செய்தால், பொறுப்புணர்வு "கோட்பாடாக" இருக்கும்.

"குறிப்பிடத்தக்கது": திட்டத்தின் நோக்கத்தின் வார்த்தைகள், காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய தழுவல், தணிப்பு மற்றும் இழப்பு மற்றும் சேதத்தை கணிசமாகக் கையாள்கின்றன என்று வெளிப்படையாகக் கூறினால், பொறுப்புணர்வு "குறிப்பிடத்தக்கதாக" இருக்கும்.

"ஓரளவு": திட்டத்தின் நோக்கத்தின் வார்த்தைகள் வெளிப்படையாகக் கூறப்படாவிட்டால் அல்லது காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய தழுவல், தணிப்பு மற்றும் இழப்பு மற்றும் சேதத்தை நிவர்த்தி செய்வதற்கான ஒரு சிறிய கவலையாக மட்டுமே இருந்தால், பதிலளிப்பு "ஓரளவு" என்று இருக்கும்.

"சாத்தியம்": காலநிலை மாற்றம் தொடர்பான தழுவல், தணிப்பு மற்றும் இழப்பு மற்றும் சேதத்திற்கு திட்டம் தெளிவான பங்களிப்பைச் செய்யவில்லை என்றால், அல்லது அது செய்யும் என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றால், ஆனால் திட்டத்தின் விளைவுகள் காலநிலை மாற்ற தழுவல், தணிப்பு மற்றும் இழப்பு மற்றும் சேதத்தை குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கும் என்றால், பொறுப்புணர்வு "சாத்தியம்" என்று கருதப்படும்.